**செய்தி வெளியீடு எண்: 874** **நாள்: 03.12.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

**“கஜா” புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதி உதவி அளித்த மாணவி சிறுமி அக்ஷயாஸ்ரீ – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்களின் வாழ்த்துக்கள் மற்றும் பாராட்டுக்கள் தெரிவித்து மிதிவண்டி வழங்கினார்**

******

சேலம், கிச்சிப்பாளையம், J.J. நகர், திரு.டி.சரவணன் அவர்களின் மகள் சிறுமி அக்ஷயாஸ்ரீ, சேலம், ஹோலி ஏஞ்சல்ஸ் மெட்ரிகுலேசன் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு “சி” பிரிவில் படித்து வருகிறார். அவர், பள்ளிக்குச் சென்றுவர மிதிவண்டி வாங்குவதற்காக தனது பாட்டி சிறுக, சிறுக கொடுத்த ரூ.520/–ஐ, மிதிவண்டி வாங்காமல் “கஜா” புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிடும்வகையில், முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு வழங்கினார்.

சிறு வயதிலேயே, பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிட வேண்டுமென்ற நோக்கத்தில் நிவாரண உதவி வழங்கிய சிறுமி அக்ஷயாஸ்ரீ–க்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் தனது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்து, சிறுமியின் மனிதநேயம் மற்றும் கொடையுள்ளத்தை பாராட்டும் வகையில் சிறுமி அக்ஷயாஸ்ரீ–க்கு ஒரு புதிய மிதிவண்டி வழங்கினார்.

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**